**செ. கு. எண்**: 72 **நாள்**:17.02.2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 17.2.2012

இன்று **(17.2.2012)** காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் வட்டம், அடையாளச்சேரி கிராமம் அருகில், புதுச்சேரி – சென்னை கிழக்குக் கடற்கரை சாலையில் உள்ள பாலத்தில் சென்று கொண்டிருந்த மாட்டு வண்டி ஒன்றின் மீது அரசு பேருந்து மோதியதில், மாட்டு வண்டியை ஓட்டிச் சென்று கொண்டிருந்த கூவத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. வீரராகவன் என்பவரின் மகன் திரு. பாலசுந்தரம் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இவ்விபத்தில் அகால மரணமடைந்த பாலசுந்தரம் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இச்சாலை விபத்தில் அரசு பேருந்தில் பயணம் செய்த 40 பேர் காயமடைந்தனர் என்பதை அறிந்து நான் மிகவும் வருத்தம் அடைந்தேன். காயமடைந்து மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வரும் இவர்கள் அனைவரும் விரைவில் பூரண குணமடைய வேண்டும் என்ற என்னுடைய விருப்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்விபத்தில் காலமான பாலசுந்தரம் குடும்பத்திற்கு ஒரு லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா 25,000/– ரூபாயும், சாதாரண காயமடைந்தவர்களுக்கு தலா 10,000/– ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**